வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 23.01.2025 வியாழக்கிழமை | இதழ் : 23 | பக்கங்கள் : 12




# மாகாண சபைகளின் செயல்திறனை அதிகரிப்பதற்கு புதிய பிரேரணைகள்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. முன்வைக்கிறார்




கொழும்பு, ஜனவரி 23

**மாகாண சபைகளின் செயல்திறனை அதிகரிப்பதற்கான புதிய பிரேரணைகளை பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அறிமுகப்படுத்தவுள்ளார்.**

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் மூன்று தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணைகளை கையளித்துள்ளார். இந்த சீர்திருத்தங்களின் நோக்கம் மாகாண சபைகளின் செயல்திறனை வலுப்படுத்துவதற்குத் தேவையான அடிப் படை சட்ட ஏற்பாடுகளை வழங்குவதாகும் என

11



# தமிழ் தேசிய எம்.பிக்களை சந்தித்தார் கனடா தூதுவர்!

- பு.கஜிந்தன் -

கொழும்பு, ஜன. 23

இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கின்னனுக்கும் தமிழ் தேசியம் சார்ந்து பயணிக்கும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை

11

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை குறித்து அடுத்த வாரத்தில் முக்கிய அறிவிப்பு!

## ஜனாதிபதி அநுரகுமார தகவல்

கொழும்பு, ஜன. 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக ஒருவார காலப்பகுதிக்குள் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் அவை முழு வீச்சில் இடம்பெற்று வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் மத்திய வங்கி திறைசேரி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகள் பற்றி கருத்து தெரிவித்த ஜனாதிபதி, அர்ஜூன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை

11

# சட்ட திட்டங்களினால் மட்டும் நாட்டை முன்னேற்றமுடியாது!

## அநுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 23

நடைமுறைச் சட்டங்களினால் மாத்திரம் நாடொன்று முன்னோக்கிச் செல்லமுடியாதெனவும் நாட்டின் பாரம்பரியம் மிக முக்கியமான அம்சமாகும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை பௌத்த மதத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பட்ட பாரம்பரியத்தின் ஊடாக சிறப்புக்குரிய பணியை ஆற்றியிருப்பதாகவும், அந்த பாரம்பரியத்தைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிகளிடம் பாதுகாப்பாகக் கையளிக்கவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை ராமன்ய பீடத்தின் 74 ஆவது

11

# அரிசி ஆலைகளை இனிமேல் இராணுவம் கண்காணிக்கும்!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய செயற்படாத அரிசி ஆலைகளைக் கட்டுப்படுத்த இராணுவத்தை களமிறக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பாரிய நெல் ஆலைகளின் உரிமையாளர்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய

11

# உணவுப் பாதுகாப்புக்காக துல்லியமான கட்டமைப்பு!

கொழும்பு, ஜன. 23

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதற்காக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்ட உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் முதல் முறையாக கூடினர்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் பாதுகாப்பான, சுகா தாரப் பாதுகாப்பான மற்றும் நிலையான

11

# வட்டுவாகல் பாலத்துக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு

## ரவிகரன் எம்.பியிடம் அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜன. 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியப் தேவையான வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கான நிதி 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் உறுதியளித்துள்ளார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அமைச்சருக்கு இடையிலான சந்திப்பின்போது இந்த உறுதி

11

# யாழ்.கலாசார நிலைய பெயர் மாற்றத்தை உடன் மீளாய்வுக்கு உட்படுத்திச் சீர்செய்க!

## இந்திய துணைத் தூதுவரிடம் சீ.வீ.கே. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 23

'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். எனவே யாழ்ப்பாண மத்திய கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்ற விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம் என தமிழரசுக் கட்சி சார்பில் கட்சிப் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் யாழ். இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை



தூதரகத்தில் இந்திய துணை தூதுவர் சாய் முரளியைச் சந்தித்து சீ.வீ.கே.

11

# இனப்பிரச்னை தொடர்பான நிலைப்பாட்டை ஜே.வி.பி. இன்னும் தெளிவுபடுத்தவேயில்லை!

## பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார் கஜேந்திரகுமார்

கொழும்பு, ஜன. 23

தமிழ்த் தேசியப் பிரச்னை தொடர்பான அவர்களின் கடந்த கால நிலைப்பாடுகள் காரணமாக, எனக்கு அவர்களுடன் அதிக உடன்பாடு இல்லை. இனப்பிரச்னை தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜே.வி.பி இன்னும் தெளிவாக்கவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கத்தின்



கவனத்துக்கு ஒரு முக்கிய விடயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். பொதுப் பாதுகாப்பு

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான 8 இந்திய மீனவருக்கு ஆறு மில்லியன் ரூபா அபராதம்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு

கிளிநொச்சி, ஜன. 23

**கிளிநொச்சி இரணைதீவை அண்மித்த கடற்பகுதியில் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 இந்திய மீனவர்களுக்கும், 6 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 8 மாத காலச் சிறைத் தண்டனையும் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.**

கடந்த 12 ஆம் திகதி அதி காலை இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த நிலை யில், நேற்று மீண்டும் கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப் பட்ட வேளை, தடை செய்யப் பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன்பிடித்த முத லாவது குற்றச்சாட்டுக்கு 6 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கை கடல் எல்லைக் குள் நுழைந்த இரண்டாவது குற்றச்சாட்டு தொடர்பில் 8 பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட்டதுடன், 10 வருடங்க ளுக்கு ஒத்திவைக்கப்பட்ட, 8 மாத காலச் சிறைத் தண்டனை யும் விதிக்கப்பட்டது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் நடவடிக் கைகளை கட்டுப்படுத்த நீரியல் வளத்துறை திணைக்களத்தி னால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன் பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் கடல் வளம் அழிவடையும் நிலை உருவாகி யுள்ள நிலையில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக் களம் சட்டவிரோத நடவடிக் கையில் ஈடுபடுவோரை கைது செய்ய திட்டமிடப்பட் டுள்ளது.

அதற்கமைவாக, பாது காப்புத் தரப்பினர், சட்ட நடவ டிக்கைகளை மேற்கொள்ள இருப்பதால் மீனவர்களுக்கு தெரியப்படுத்துமாறு, நீரியல் வளத்துறை திணைக்கள அதிகா ரியால் வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# பொன்னாலைப் பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!


யாழ்ப்பாணம், ஜன. 23

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன் னாலை தெற்கு சுழிபுரம் பகுதி யில் நேற்று கஞ்சாவுடன் 54 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டை பொலி ஸாரால் இந்த கைது நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவரிடமி ருந்து 0.92 கிராம் கஞ்சா மீட் கப்பட்டது. அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (அ-05)

# மன்னார் அருவி ஆற்றை அண்டிய பல கிராமங்களில் வெள்ள அபாயம்!



மன்னார், ஜன. 23

மன்னார் மாவட்டத்தில் அருவி ஆற்றை அண்டிய பல கிராமங்களில் வெள்ள அபா யம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் குறித்த பகுதிகளை சேர்ந்த மக்களை இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் சில பகுதிகளில் தொடர்ச்சி யாக பெய்து வரும் மழை காரணமாக, பெரிய குளங்களின் வான் கதவுகள் திறக் கப்பட்டுள்ளதால், மல் வத்து ஓயா எனப் படும் அருவி யாற்றை அண்டிய பகுதிகளாக உள்ள, நானாட்டான் மற்றும் மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள பல கிராமங்களுக்கு, அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக, மடுக்கரை, இராசமடு, அச்சங்குளம் கிராம மக்களை, பாதுகாப்பான இடங் களுக்கு செல்வதற்கு தயாராக இருக்குமாறு, அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, அருவி ஆற்றில் 13.2 அடி நீர்வரத்து காணப் படுகின்றது.

இந்த நீர்வரத்து மேலும் அதிகமானால், மக்கள் கட்டா யம் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என, மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள் ளது.

இவ்வாறு, மக்கள் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட் டால், நானாட்டான் டிலாசால் கல்லூரி மற்றும் மோட்டக் கடை சிவராஜா வித்தியாலயங் களில் தங்குவதற்கான ஒழுங்கு கள் செய்யப்பட்டுள்ளதாக, நானாட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அருவி ஆற்றில் நீர்வரத்து அதிக மாகி வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால், அருவி ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் எனவும், அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# தாளையடி கடற்கரை துப்புரவு



யாழ்ப்பாணம், ஜன. 23

'செழுமையான தேசம் அழகான வாழ்வு' என்ற தூர நோக்கை அடையும் வித்த தில், 'கிளீன் சிறிலங்கா' திட்டத்தின் கீழ் வடம ராட்சி கிழக்கு தாளையடி யில் கடற்கரை பிரதேசங் களை சுத்தம் செய்யும் நடவ டிக்கை நேற்று முன்னெடுக்கப் பட்டது.

தாளையடி கடற்கரைப் பிர தேசத்தைச் சுற்றியுள்ள பகுதி களை, இராணுவத்தின் 52 ஆவது படையணியுடன் இணைந்து, பருத்தித்துறை பிர தேச சபையினர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தினர், மருதங்கேணி சுகாதார வைத் திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள், சமூர்த்திப் பயனாளிகள், கிராம அலுவலர்கள், கிராம அபிவி ருத்தி சங்கங்கள், கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாச பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் இணைந்து, துப்பரவுப் பணி களை முன்னெடுத்தனர்.

இதில் யாழ்ப்பாண இரா ணுவ கட்டளைத் தளபதி மாதவ யஹம்பத், கட்டைக் காடு, மிருசுவில், முகமாலை படை முகாம்களின் அதிகாரி கள், வடமராட்சி கிழக்கு பிர தேச செயலாளர் சு.பிரபாகர மூர்த்தி, வெற்றிலைக்கேணி கடற்படை முகாம் பொறுப்பதி காரி கிரிசாந்த ரணசிங்க, கட் டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய பங்குத் தந்தை அ.அமல் ராஜ் அடிகளார், முள்ளியான் வைத்தியசாலை வைத்திய அதி காரி யோ.திவ்யா ஆகியோர் பங்கேற்றனர். (அ)

# முகநூலில் மோசடி; சந்தேக நபர் கைது

கொழும்பு, ஜன. 23

முகநூல் கணக்கொன்றை ஹக் செய்து, அதன்மூலம் உறவினர் போல ஆள்மாறாட் டம் செய்து நிதிமோசடியில் ஈடுபட்ட 28 வயதுடைய சந் தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், ஹக் செய்த முகநூல் கணக்கின் மூலம் தன்னை உறவினராக காட்டி, மூன்று வேளைகளில் வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து மொத் தம் 7,00,000 ரூபாயை மோசடி செய்துள்ளார்.

கொழும்பு குற்றப்பிரிவுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முறைப்பாடு கிடைத்த தையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. முகநூல் கணக்குகள் மற்றும் பண பரிவர்த்தனைகளை ஆராய்ந்த போது, நபரின் அடையாளம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கட்டாரில் இருந்து இலங்கைக்குத் திரும்பி யதை ஒட்டி, குடிவரவுத் தடை பிறப்பிக்கப்பட்டது. இதன் படி, நேற்று முன் தினம் அவர் நாட்டுக்கு வந்தவுடன் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர். (அ)

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தை தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

பருத்தித்துறை மரக்கறி சந்தை குறித்து, வியாபாரிக ளால் தொடுக்கப்பட்ட வழக்கு, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மரக்கறி சந்தையை புதிய கட்டடத்துக்கு இடம் மாற்று வது தொடர்பில் மரக்கறி வியாபாரிகளால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி தாக்கல் செய்யப் பட்ட வழக்கின் பிரகாரம் நேற்று வழக்கு விசாரணை இடம்பெற்றதுடன் வழக்கு, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

அதனால் மரக்கறிச் சந்தை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை, பழைய இடத்தில் இயங்க முடி யும்.

இந்த வழக்கில் சட்டத் தரணி வி.மணிவண்ணன் ஆஜ ராகியிருந்தார். (அ-02)

# புங்குடுதீவில் காய்ச்சலால் 4 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக சிறுமி ஒருவர் உயி ரிழந்துள்ளார்

புங்குதீவு 06ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த வயது 04 எனும் சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கடந்த சில தினங்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டி ருந்த சிறுமியை பெற்றோர் கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்து வந்துள்ளனர்

அந்நிலையில் கடந்த திங் கட்கிழமை சிறுமிக்கு கடும் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் பெற்றோர் புங்குடுதீவு வைத் தியசாலைக்கு கொண்டு சென்றவேளை சிறுமி ஏற்க னவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட் டனர்.

இந்நிலையில் உடற்கூற்று பரிசோதனையில் , நிமோனியா காய்ச்சல் காரணமாகவே சிறுமி உயிரிழந்துள்ளார் என அறிக் கையிடப்பட்டுள்ளது. (அ)

# குற்றச் செயல்களைத் தடுக்க சிறைகளுக்கு விசேட அணிகள்

கொழும்பு, ஜன. 23

சிறைகளில் நடைபெறும் குற்றச்செயல்களை கட்டுப் படுத்த மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்த விசேட அதிரடிப் படையின் சிறப்பு அணிகள் முக்கிய சிறைகளில் நியமிக்கப் படும் என ஜனாதிபதி அறிவித் துள்ளார்.

இவ் அணிகள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படுவதன் மூலம், இதன் செயல்திறன் மேம்படுத்தப் படும் என்றும் அவர் தெரிவித் தார்.

இந்நடவடிக்கை, சிறை களில் உள்ள சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப் படுத்துவதற்கும், பாதுகாப்பு முறையை மேம்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்றும் என கருதப் படுகிறது.

விசேட அதிரடிப்படையின் பணிகள், சிறை முகாம்கள் மற் றும் பொது மக்களின் நம்பிக் கையை வளர்க்கும் வகையில் செயல்படுவதோடு, சிறை முகாங்களில் அமைதி நிலை மையை உறுதி செய்யும் என் றும் நம்பப்படுவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

23.01.2025 வியாழக்கிழமை

பிலவ வருடம், தை 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## முதலில், முதல் படியை தாண்டுங்கள்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முப்பது வருடங்களுக்கு தொடரும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான கதை சொல்லல்களை கேட்கும் போது, ராஜபக்ஷக்களே நினைவுக்கு வருகின்றனர். அவர்களும் இவ்வாறான அரசியல் கணக்குகளுடன் கனவுகளை கொண்டிருந்தனர்.

2010இல் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, ராஜபக்ஷ குடும்பம் தென்னிலங்கையின் அரச குடும்பம் போன்றே தங்களை வெளிப்படுத்தியது. நாட்டின் முக்கிய துறைகள் அனைத்துமே அவர்களது குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. தங்களை எவராலும் வீழ்த்த முடியாது என்னும் அவர்களது கற்பனைக்கு கடிவாளம் இருக்கவில்லை.

2015இல் பின்னடைவைச் சந்தித்த போதிலும் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவு இருந்தமையால் மீண்டும் தங்களுக்கான வாய்ப்பு வருமென்னும் எதிர்பார்ப்புடன் இருந்தனர் - கோட்டாபயவின் வெற்றியைத் தொடர்ந்து அவர்களது கற்பனை மீளவும் கடிவாளமின்றி அலைந்தது. கோட்டாபய ராஜபக்ஷ தன்னையொரு பௌத்த சிங்களத் தலைவனாக பிரகடனம் செய்தார். தான்தான் சிங்களவர்கள் தேடிய தலைவன் என்று அவரது கற்பனை கரைபுரண்டது.


ஆசைகளை துறந்து, தனது இளவரசு அரியணையை புறந்தள்ளிய கௌதம புத்தரின் போதனையான பௌத்தத்தை ராஜபக்ஷக்கள் தங்களின் அதிகார ஆசைக்கான கருவியாக்கிக் கொண்டனர். இன்றும் இலங்கையில் பௌத்தத்தின் நிலைமை இதுதான். தான் ஒரு பௌத்த சிங்களத் தலைவன் என்று பிரகடனம் செய்ததன் விளைவாக, ராஜபக்ஷ குடும்பம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான அத்திபாரத்தைப் போட்டுவிடலாம் என்றே எண்ணினர்.

இறுதியில் பொருளாதார நெருக்கடிக்கு முன்னால் ராஜபக்ஷக்களின் அதிகாரக் கனவு காணாமல் போனது. இவ்வாறான அதிகார விரும்பிகள் பலரது கனவுகள் காணாமல் போயிருப்பதற்கு உலகில் பல உதாரணங்கள் உண்டு - எனினும் அதிகாரத்தை விரும்புவர்கள் எவருமே கடந்த காலத்திலிருந்து எதனையும் கற்றுக்கொள்வதில்லை.

தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கும் வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரிதான ஒன்றுதான் - அதில் முரண்பட ஒன்றுமில்லை ஆனால், முப்பது வருடங்களுக்கான அதிகாரத்திற்கு கணக்குப் போடுவதற்கு முன்னர், கிடைத்திருக்கும் முதல் காலகட்டத்தை கடக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியானது, ராஜபக்ஷக்கள் போன்று அதிகார மமதையில் செயல்படவில்லை என்பது உண்மைதான் - தேசிய மக்கள் சக்தி கூறுவது போன்று மாற்றங்கள் நிகழ்ந்தால் அது அனைத்து மக்களுக்கும் நன்மையானதுதான் ஆனால், அதற்கு தூரநோக்குடன், இனவாத சக்திகளை புறம்தள்ளி செயல்படவேண்டும்.

இதுவரையில் தென்னிலங்கையின் பாரம்பரிய கட்சிகள் வரைந்து வைத்திருக்கும் சிங்கள - பழமைவாத தேசியவாத அரசியலிலிருந்து, தேசிய மக்கள் சக்தி அதிகம் வெளியில் வரவில்லை - வெளியில் வர முயற்சிக்கவும் இல்லை. இந்த நிலையில் திடீரென்று ஏற்படும் அரசியல் நெருக்கடிகளால், பொருளாதார பின்னடைவுகளால், புவிசார் அரசியல் மோதல்களால் அநுரகுமார அலையும் தொலைந்து போகலாம் - எனவே அதிகம் ஆசைப்படுவற்கு முன்னர், செயலில் தங்களை நிறுவும் பணிகளிலேயே தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்த வேண்டும். குறிப்பிட்டவாறு உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, தங்களின் அரசியல் ஆளுமையை நிரூபிக்க வேண்டும். அரசியல் அமைப்பிலுள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்தி, ஏனைய ஆட்சியாளர்களின் தவறுகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும்.

# வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம் கிளிநொச்சி மக்கள் அந்தரிப்பு



கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரற்ற கால நிலையால் மக்களின் இருப்பிடங்களுக்குள் வெள்ளநீர் உட்புகுந்ததுடன் உள்ளக போக்கு வரத்துகளும் பாதிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை பெய்த கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதேவேளை, இரணைமடு குளம் வான் பாய்ந்து வருவதுடன், குளத்தின் சகல வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் உள்ளிட்ட நீர்ப்பாசனக் குளங்களும் வான் பாய்ந்து வருகிறது. இதனால் வெளியேறும் நீரும் மக்கள் குடியிருப்புக்கள், உள்ளக வீதிகளை கடந்து செல்கின்றன.

வெள்ளம் வடிந்தோடும் நிலையில் கண்டாவளை, கோரக்கன்கட்டு, முரசு மோட்டை, ஊரியான் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்களை அவதானமாக செயல்படுமாறும், குளங்களை பார்வையிடும் மக்கள் அவதானமாக செயல்படுமாறும் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை சீரற்ற வானிலையால் சரிந்து விழுந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களை பாதுகாப்பாக அகற்றி போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் அரச மரக்கூட்டுத்தாபானத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

(எ-05)

# சிவில் பாதுகாப்பு ஊழியர்களால் நெல் களஞ்சியசாலை துப்புரவு

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நெல் களஞ்சியசாலைகள் இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள நெல் களஞ்சியசாலை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புப் பிரிவு ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், நாடு முழுவதும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் கிளீன் சிறீலங்கா தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த பெரும் போக பருவத்தின் நெல் அறுவடையை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெல் கொள்முதல் செய்த பிறகு, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான 209 நெல் களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்க திட்டமிட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெல் களஞ்சியசாலைகள் மற்றும் சுற்றியுள்ள நிலம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் காணப்படுகிறது.

இந்த நிலையில் அவற்றைப் பயன்படுத்த ஏற்றதாக மாற்றவும், சிறிய பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளவும் அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதுடன் தேசிய நலனுக்காக பாதுகாப்புப் படையினர் ஆதரவு வழங்கும் வகையில், பாதுகாப்புச் செயலாளரின் அறிவுறுத்தல்களின்படி நாடு முழுவதும் உள்ள நெல் களஞ்சியசாலைகளை சுத்தம் செய்யும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.(எ)

# கிளிநொச்சியில் அஸ்வெசும 2ஆம் கட்ட பணிகள் ஆரம்பம்


கிளிநொச்சி,ஜன.23

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பதாரர்களின் வீட்டுக்குச் சென்று தகவல்கள் பதிவு செய்யும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை மற்றும் தருமபுரம் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுக்குட்பட்ட மக்களின் வீடுகளுக்குச் சென்று அரச உத்தியோகத்தர்கள் தகவல் களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 1215 விண்ணப்பதாரர்கள் இரண்டாம் கட்டத்துக்காக பதிவு செய்துள்ளதுடன் குறித்த பணி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக் கட்டும். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்று கொள்வார்கள். சொந்த பந்தங்களை சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும் . மனதிற்கு இதமான செய்தி வரும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**மகரம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். அக்கம்-பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள்.

# யாழ்ப்பாணம் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத்துக்கு மேலும் காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கத்துக்கு மேலும் 114 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அடிப்படை கட்டுமானங்கள் மற்றும் வசதிகளை துரிதமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர், முதல்கட்டத்தில் இந்தப் பணிகளை முழுமைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர். கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமையும் எனவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். காணிகளை சுவீகரிப்பதற்கு முன்னதாக 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலை யத்துக்காக பெற்றுக் கொள்ளப் பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை என ஆளுநர் சுட்டிக்காட்டினார். தற்போதைய பெறும திக்கு ஏற்ப அவர்களுக்கு இழப்பீடு முதல்கட்டமாக வழங்கிய பின்னரே தற்போது தேவைப் படும் மேலதிக காணிகளுக்காக சுவீகரிப்பை ஆரம்பிக்கலாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தற்போது சேவையை முன்னெடுக்கும் இண்டிகோ விமான சேவை நிறுவனம் சென்னை - யாழ்ப்பாணம் சேவைக்கு மேலதிகமாக பெங்களூர் - யாழ்ப்பாணம் சேவையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (எ- 02)

# தேசிய மட்ட பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் கௌரவிப்பு

வவுனியா, ஜன.23

தேசிய மட்ட பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் ஒழுங்கமைப்பில் வவுனியா ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகிய குறித்த போட்டி நான்கு நாட்கள் நடைபெற்றன.

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவின் கீழ் தேசிய ரீதியில் 575 ஆண், பெண் போட்டியாளர்கள் இதில் பங்கேற்ற நிலையில் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

மேலும், இப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன், வெற்றிக்கேடயங்களும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.




இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் பற்றிக் டி றஞ்சன், இலங்கை பூப்பந் தாட்ட சங்கத்தின் உப தலைவர் ரொஷான் குணவர்த்தன, கௌரவ விருந்தினராக விளையாட் டுத்துறை பணிப்பாளர் டி. முகுந்தன் மற்றும் விளையாட்டுத்துறை முக்கியஸ்தர்கள், போட்டி நடுவர்கள், போட்டி யாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# நாவற்குழி உணவு களஞ்சியசாலையில் நெல் உலரவிட அனுமதி வழங்க வேண்டும்

## ஆளுநரிடம் பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.23

நாவற்குழி உணவு களஞ்சியசாலை போன்ற இடங்களில் நெல் உலரவிடுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றுவடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலையும், அரிசியின் கட்டுப்பாடு விலையும் விரைவாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

நெல் அறுவடை காலங்களில் உலரவிடும் தளங்கள் இல்லாமையால் விவசாயிகள் வீதிகளில் நெல்லை உலர விடுகின்றனர். இதனால், வீதிகளில் நெருக்கடி மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனைக் கருத்தில் எடுத்து அதற்கான மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

தற்போது அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நாவற்குழி உணவு களஞ்சியசாலை போன்ற இடங்களில் நெல் அறுவடை காலங்களில் நெல் உலரவிடுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில் வயலில் அறுவடை செய்யும்போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கு கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை என்று அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.(எ)

# பன்னாலையில் மகாதேவ சுவாமிகள் குருபூஜை

யாழ்ப்பாணம், ஜன.23

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிவசிறீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சித்தர்கள் குருபூஜை தொடர் - 10 மகாதேவ சுவாமிகள் குருபூஜை விழா பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறவுள்ளது. சமயஜோதி நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன்கலத்து சிறப்பிக்கவுள்ளார்.

மகாதேவ சுவாமிகள் குருபூஜையை தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் அதனையடுத்து "ஈழத்து சித்தர்களில் மகாதேவ சுவாமிகள்" என்னும் விடயப் பொருளில் சைவப்புலவர் க. கைலநாதனின் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதி ஆரம்மாகும்போது விலைகள் படிப்படியாகவே குறையும்!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

**எதிர்வரும் பெப்ரவரி மாதம் வாகன இறக்குமதியை மீள ஆரம்பிக்கும்போது விலை அதிகரிப்பு காணப்பட்டாலும், சந்தை நடத்தைக்கு ஏற்ப விலை பின்னர் படிப்படியாக குறைவடையும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், முதல் சில மாதங்களில் அதிக தேவையை சமாளிக்க வாகனங்களின் விலை ஆரம்பத்தில் உயரும். ஆனால் காலப்போக்கில், இந்த அழுத்தத்தை படிப்படியாக குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 1 முதல் 2 பில்லியன் டொலர் மதிப்புள்ள வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, 2018 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில் 1.4 பில்லியன் டொலர் மதிப்பிலான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த நிலையில் 5 வருட இடைவேளையின் பின்னரான வாகன சந்தையை மீண்டும் திறக்கும் முடிவு நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கான ஒரு படியாகும்.

எனினும், இந்த மறு தொடக்கம் தற்போதைய டொலர் கையிருப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடாது.

முன்னதாக வாகனச் சந்தையில் டொலர் பெறுமதி 190 ரூபாவாக இருந்தபோது வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டது.

தற்போது டொலரின் விலை 300 ரூபாவாக இருப்பதால், புதிய வாகனங்களின் விலை டொலர் மாற்று விகிதத்திற்கு ஏற்ப 40 வீதம் அதிகரிக்கும்.

இதனிடையே, இறக்குமதிகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக, அதிக விலையில் குத்தகை வசதிகளின் கீழ் பல வாகனங்கள் வாங்கப்பட்டதன் காரணமாக, செக்கண்ட் ஹாண்ட் வாகனச் சந்தை உருவாகியுள்ளது.

எனவே செக்கண்ட் ஹாண்ட் மற்றும் புத்தம் புதிய வாகன சந்தை விலைகளுக்கு இடையே மோதல்களைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பெப்ரவரி 1 முதல் 1.2 பில்லியன் டொலர் மதிப்புள்ள வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது, ஆண்டு முழுவதும் இறக்குமதி தொடரும்.

எனினும் பெப்ரவரி மாதத்தில் அனைத்து வாகன இறக்குமதிகளுக்கும் ஒரே நேரத்தில் சந்தையைத் திறக்க அரசாங்கம் உத்தேசிக்கவில்லை.

இதுவரை சுமார் 20,000 வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு தற்போது இறக்குமதிக்கு இடமளிக்கப்படாது.

அரசாங்கம் தற்போது இந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை ஆலோசித்து வருகிறது.2018 ஆம் ஆண்டில், வாகன அனுமதிப்பத்திரத்திற்காக 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கள் ஒதுக்கப்பட்டது-என்றார். (அ)

# வெளிநாட்டு கப்பல் அனுமதிக்கு மிகவிரைவில் புதிய நடைமுறை!

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் வெளிநாட்டு போர்க்கப்பல்கள், இராணுவ விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குவதற்காக தற்போதுள்ள நிலையான செயற்பாட்டு நடைமுறையை திருத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

விரைவில் எதிர்காலத்தில் இந்த விடயத்தில் புதிய முறையை உருவாக்குவதே குழுவின் பணி என அமைச்சர் விஜித ஹேரத் கூறினார்.

ஜனவரி மாதம், இலங்கை தனது கடற்பரப்பில் இயங்கும் வெளிநாட்டு கடல் சார் அறிவியல் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு ஒரு வருட காலத் தடை விதித்தது.

தடைக்காலம் நீக்கப்பட்டு, தற்போதுள்ள நடைமுறையின் கீழ் ஆய்வுக் கப்பல்களுக்கான இராஜதந்திர அனுமதி தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் கீழ் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கும் வகையில், திருத்தப்பட்ட நடைமுறையை குழு விரைவில் இறுதி செய்யும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். (அ)

# மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்!

கொழும்பு, ஜன. 23

ஹூரிகஸ்வெள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதர்சனாகம பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹூரிகஸ்வெள - சுதர்சனாகம பகுதியில் வசிக்கும் 14 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சிறுவன் தனது வீட்டுக்கு அருகில் இருந்த பலா மரத்தின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது, பலா மரத்தின் கிளை அருகிலுள்ள மின் கம்பியில் மோதியதில் சிறுவன் மீது மின்சாரம் பாய்ந்து மரத்தில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த சிறுவனை பலா மரத்தின் கிளைகளை வெட்டுமாறு பணிக்கப்பட்ட அயல் வீட்டில் வசிக்கும் 62 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சடலம் தம்புத்தேகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, ஹூரிகஸ்வெள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பாடசாலை மாணவி கடத்தல் பொலிஸ் அதிகாரி பணிநீக்கம்

கொழும்பு, ஜன. 23

தவுலகல, ஹபுகஹயட பகுதியில் 18 வயது பாடசாலை மாணவி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் முறையாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, அன்றைய தினம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய பொலிஸ் பரிசோதகர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரை இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர், கடுகண்ணாவை பொலிஸ் நிலையத்துக்கும், குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக செயற்பட்ட உப பொலிஸ் பரிசோதகர், வேலம்பொடை பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்துக்குப் பொறுப் பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்கவின் உத்தரவின் பேரில் இந்த ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் தவுலகல பொலிஸ் பிரிவின் ஹபுகஹயட பகுதியில் இந்த கடத்தல் நடந்தபோது, அந்த இடத்தில் பயணித்ததாகக் கூறப்படும் கம்பளை பொலிஸில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் அது தொடர்பில் தவுலகல பொலிஸின் செயற்பாட்டு அறைக்கு அறிவித்துள்ளார். எனினும் அந்த அறிவிப்பு குறித்து தவுலகல பொலிஸார் உரிய முறையில் செயற்பட வில்லை என குற்றச்சாட்டில் இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# குற்றச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் பலர் கைது

## பொது பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 23

நாட்டில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கைது செய்யபடுள்ளவர்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கிளீன் சிறிலங்கா திட்டம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தினால் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர், இருவர் இதில் தொடர்புப்பட்டுள்ளனர். இந்த தினங்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திட்டமிட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 15 பேரும், அவர்களுக்கு உதவிய 15 பேரும் கைதாகியுள்ளனர்.

அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வு56 துப்பாக்கிகள் -7, பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 10, ரிவால்வர்கள் 14,வெடிமருந்துகள் பயன்படுத்தும் துப்பாக்கிகள் 461,போர 12 ரக துப்பாக்கிகள் 58 என்பன கைபற்றப்பட்டுள்ளன.அத்துடன், இந்த 2 மாதங்களுக்குள் 354 கிலோகிராம் ஹெராயின், 3,847 கிலோகிராம் கேரள கஞ்சா, 3.8 கிலோகிராம் கொக்கெய்ன், 181.9 கிலோகிராம் ஹாஷிஷ் மற்றும் 759 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நிதி குற்றப் பிரிவு அடுத்த வாரம் மீண்டும் நிறுவப்படும் அதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் உள்ள 29,000 கோப்புகளில் இருந்து நிதிக் குற்றக் கோப்புகளை அந்தப் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# 51 மஞ்சள் மூடைகளுடன் கற்பிட்டியில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 23

கற்பிட்டி - நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலையந்தடி கடற்கரையோரத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்வதற்கு தயாராக இருந்த ஒரு தொகை மஞ்சள் மூடைகளுடன் சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.இதன்போது, கடற்பிரதேசத் தில் இருந்து லொறியொன்றின் மூலம் கொண்டு செல்ல தயா ராக இருந்த 51 மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 2000 கிலோ கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தே கத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

# தனது பட்டத்தை நீக்குமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்

கொழும்பு, ஜன. 23

பாராளுமன்ற இணையத் தளத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிறிஷாந்த அபேசேனவின் பெயரில் உள்ளடக்கப்பட்டிருந்த "பேராசிரியர்" என்ற பட்டத்தை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய இந்த மாற்றம் செய்யப்பட்டதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் கிறிஷாந்த அபேசேனவிடம் வினவிய போது, "பேராசிரியர்" என்ற பட்டத்தை வைத்திருந்தாலும், தற்போது பல்கலைக்கழக சேவையில் இல்லாததால் அதனை பயன்படுத்த விரும்பவில்லை என தெரிவித்தார்.

பாராளுமன்ற ஹன்சாட்டில் தனது பெயரில் பேராசிரியர் என்ற தலைப்பு சேர்க்கப்படவில்லை என்று கூறிய அவர், தனது பல்வேறு ஆவணங்களிலும் அது இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயரில் உள்ளடங்கியிருந்த கலாநிதிப் பட்டமும் அமைச்சரின் கோரிக்கையை அடுத்து பாராளுமன்ற இணையத்தளத்திலிருந்து அண்மையில் நீக்கப்பட்டது.

தான் அத் தகவலைப் பகிர்ந்து கொள்ளாத நிலையில் குறித்த பட்டம் தனது பெயரில் சேர்க்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் செயற்பாடுகளில் சகலரையும் ஈடுபடுத்தும் பட்ஜெட்!

## தயாரிக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 23

**நாட்டின் அனைத்துப் பிரி வினரையும் பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற முதற்கட்ட கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

செயற்திறனுடனும் திறமையாகவும் பொருளாதார செயல்முறையை கையாள்கையில் பொதுப் போக்குவரத்தை நிறுவுவதன் முக்கியத்துவம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்த அரசாங்கம் எவ்வாறு தலையிடவேண்டும் என்பது குறித்தும் அதற்கு வசதிகள் அளிப்பதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த அரசாங்கங்களில் பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பணம் பயனுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை எனவும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை தேசிய திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் வழங்குவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் கடன்களை ஒரு வருடத்துக்குள் வசூலிப்பது குறித்தும் அந்த வர்த்தகர்களிடம் உள்ள அரிசி கையிருப்புகளை ஒழுங்குபடுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.மேல் தளத்தில் உள்ள பொருளாதாரத்தை கீழ் மட் டத்துக்கு நகர்த்தவேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஜனா திபதி, அனைத்து பிரதேசங் களுக்கும் பிரிந்து செல்லக் கூடிய ஒரு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டார்.

மேலும் தற்பொழுது அமுலில் இருக்கும் நிவாரணம் வழங்கும் முறையில் குறைபாடுகள் உள்ளதாகவும் அவற்றை அடையாளங் கண்டு நிவாரணங்கள் தேவையான சமூகத்தை சரியாக அடையாளம் கண்டு, அந்த செயல்முறையை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

இதில் தொழில் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரஸல் அபோன்சு, பிரதி திறைசேரி செயலாளர் ஏ.கே. செனவிரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# எம்.பிக்களின் சிறப்புரிமையை ஆராய எந்தக் குழுவும் இல்லை!

## சபையில் அர்ச்சுனா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 23

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை ஆராய்வதற்கு இங்கு எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் சபை அமர்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் ஒழுங்கு பிரச்னை ஒன்றை முன்வைத்து கருத்து வெளியிட்டிருந்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-கடந்த ஒரு மாத காலமாக சபையில் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. கடந்த 8ஆம் திகதி எழுத்து மூலமாக முறைப்பாடு செய்துள்ளேன். ஆனாலும் இன்று வரை எனக்கு தீர்வு வழங்கப்படவில்லை.

இன்று 21ஆம் திகதி. இன்று வரை எனக்கு தீர்வு வழங்கப்படவில்லை. இவ்வாறு நீங்கள் தொடர்ந்து செய்தால் இரண்டு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் இல்லை என்ற தோற்றப்பாடே வெளிப்படும். நாங்கள் இந்த நாட்டில் 30 வருடங்களாக யுத்தம் செய்தவர்கள். பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை ஆராய்வதற்கு இங்கு எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை-என்றார். (அ)

# சோதனை இன்றி விடுவிக்கப்பட்ட சிவப்பு எச்சரிக்கை கொள்கலன்கள்!

கொழும்பு, ஜன. 23

கட்டாய சோதனை என அடையாளம் காணப்பட்ட சுமார் 323 கொள்கலன்கள் முறையான சோதனையின்றி விடுவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த கொள்கலன்களுக்கு சிவப்பு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவை கட்டாய சோதனைக்கு உட்படுத்தப்பட அறிவித்தல் வழங்கப்பட்டதாகவும் கூட்டமைப்பின் தலைவர் அமில சஞ்சீவ குறிப்பிட்டார்.

தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத மருந்துகள், மனித பயன்பாட்டுக்குத் தகுதியற்ற வாசனை திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள், சட்டவிரோத சிகரெட்டுகள் அல்லது போதைப்பொருள்கள் மற்றும் துப்பாக்கிகள் போன்றவற்றை உள்ளடக்கியதான பிரச்னைக்கு இந்த கொள்கலன்கள் இருந்திருக்கலாம் என அவர் தெரிவித்தார். (அ)

# போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஜன. 23

ஹஷிஸ் மற்றும் குஷ் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை வைத்திருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த சந்தேக நபரிடம் 1 கிலோ 370 கிராம் ஹஷிஸ் மற்றும் 908 கிராம் குஷ் போதைப்பொருள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விவசாய பணிப்பாளர் நாயகத்தை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 23

விவசாய பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இலங்கை விவசாய சேவையின் விசேட தர அதிகாரியான கலாநிதி. ஈ. ஆர்.எஸ்.பீ.எதிரிமான்னவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விவசாயப் பணிப்பாளர் நாயகம் பதவியில் தற்போது கடமையாற்றுகின்ற திருமதி. கே.என்.எஸ்.ரணதுங்க 2025.01.21 தொடக்கம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அன்று தொடக்கம் வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு புதிய அதிகாரியொருவரை நியமிக்க வேண்டியுள்ளது.

குறித்த பதவிக்கு தற்போது விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் பதவியில் கடமையாற்றுகின்ற இலங்கை விவசாய சேவையின் விசேடதர அதிகாரியான கலாநிதி. ஈ.ஆர்.எஸ்.பீ. எதிரிமான்னவை நியமிப்பதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் 2 ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதி

கொழும்பு, ஜன. 23

கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் ஆம் கட்டத்தில் மேற்கு கொள்கலன் முனையம் இரண்டிற்கான அலைதாங்கியை நீடிப்பதற்கான விவரங்களுடன் கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த 2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்குரிய ஆலோசனை சேவைகளுக்கான நிதி மற்றும் தொழிநுட்ப ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி விருப்பம் தெரிவித்துள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் குறிகாட்டிகளுக்கமைய விருப்பக் கூற்றுப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்காக 20 விண்ணப்பதாரிகள் விருப்பக் கூற்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துளளதுடன், 07 விண்ணப்பதாரிகள் முன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

அவற்றில் 05 நிறுவனங்கள் விவரங்களுடன் கூடிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. தொழிநுட்ப விவரக்கூறுக்களைப் பூர்த்தி செய்துள்ள 03 நிறுவனங்களின் நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், குறித்த ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம்

தோவா இன்ஜினியரிங் கோ லிமிட்டெட் இற்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# வெள்ளத்தில் மூழ்கிய அநுராதபுரம்!



கொழும்பு, ஜன. 23

அநுராதபுரத்தில் பெய்த கனமழை காரணமாக, அந்த மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குறிப்பாக ஜெய ஸ்ரீமஹா போதி மாவத்தையில் அமைந்துள்ள சுற்றுலா பொலிஸ் நிலையம், தொல்பொருள் அலுவலகம், ஹோட்டல், பாடசாலை ஆகியன, நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கலா வாவி, நாச்சதுவ, கண்டி வாவி உள்ளிட்ட பெரிய குளங்களிலிருந்தும், பல சிறிய குளங்களிலிருந்தும் வெளியேறும் நீர் மல்வத்து ஓயாவில் தேங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48,000 வீடமைப்புத் திட்டங்கள் நிறைவுறுத்தப்படாத நிலையில்!

## அமைச்சர் அனுர கருணாதிலக தகவல்

கொழும்பு, ஜன. 23

**நாடு தழுவிய ரீதியில் 48 ஆயிரம் வீடமைப்புத்திட்டங்கள் நிறைவுறுத்தப்படாமல் உள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவித்தார்.**

**எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய வாய்மூல வினாவுக்கான கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-வீடமைப்பு அதிகார சபை யின் ஊடாக பெற்றுக் கொண்ட தகவல்களுக்கு அமைய பல்வேறு காலகட்டங்களில் பல பெயர்களில் கடந்த அரசாங்கங்களில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு திட்டங்களில் நிறைவடையாது 48ஆயிரம் வீடுகள் காணப்படுகின்றன.

இதற்குள் தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக் கப்பட்ட வீடமைப்புத்திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

இவற்றில் பல வீடுகள் முடிவுறாமல் உள்ளமையை அமைச்சர் என்ற ரீதியில் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

இவ்வாறு நிறைவடையாத வீடமைப்பு திட்டங்களை நிதி கிடைக்கப்பெறும் அளவுக்கு அமைய கட்டம் கட்டமாக நிறைவு செய்ய தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வங்கியுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதேபோன்று வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வழங்க முடியுமா எனவும் ஆராய்ந்து வருகின்றோம். கிடைக்கும் நிதிக்கு அமையவே இந்த விடயத்தை முடிவுறுத்த முடியும். அதேபோன்று இந்த திட்டங்கள் பூர்த்தியாகும் கால எல்லையை என்னால் குறிப்பிட முடியாத நிலை காணப்படுகின்றது. அதனையிட்டு கவலையடைகின்றேன்-என்றார். (அ)

# ரணில் 24 மாதங்களில் 25 வெளிநாட்டு பயணம்!

## நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்

கொழும்பு, ஜன. 23

ரணில் விக்கிரமசிங்க 24 மாதங்களில் 25 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டிருந்தார் என வெகுசன ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன் தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-சபையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பட்டுள்ளது.

இதனை அறிவிப்பதற்கு எமக்கு கால அவகாசம் வேண்டும்.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க 24 மாதங்களில் 25 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார்.



எனவே ரணில் மேற்கொண்ட ஒவ்வொரு விஜயம் தொடர்பாக நாம் வெவ்வேறாகவே பார்க்கவேண்டும்.

எனவே இதனை சபைக்கு அறிவிப்பதற்கு பிரதமர் இரண்டு வார கால அவகா சத்தை கோரியுள்ளார். அதன் பின்னர் சபைக்கு அறிவிக்கப் படும்-என்றார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலில் மு.கா தனித்துப்போட்டி

கொழும்பு, ஜன. 23

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப்போட்டியிடுவதாக நேற்று முன் தினம் மாலை, "தாருஸலாம்" தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமா லெப்பை, எம்.எஸ்.நழீம் உள்ளிட்ட கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கொழும்பு, தெஹிவளை-கல்கிஸ்ஸ, கோட்டே, மொறட்டுவை, கொலன்னாவ மாநகர சபைகளுக்கும், கொடிகாவத்தை, முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை மு.கா தலைவர் அறிவித்ததோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவித் தார். (அ)

# சிறிலங்கன் எயார் லைன்ஸ் விரைவில் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறும்!

## பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும

கொழும்பு, ஜன. 23

சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை அரசியல்மயப்படுத்தலிலிருந்து விடுவிப்பதன் ஊடாக இலாபமீட்டும் நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன்போது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியினால் எழுப் பப்பட்ட வாய்மூல வினாவுக் கான கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொவிட் தொற்று நெருக்கடி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், குத்தகை அடிப்படையில் இடம்பெற்றுள்ள விமானக் கொள்வனவுகள், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட குறைவு உள்ளிட்ட பல காரணங்களின் காரணமாக சிறிலங்கன் விமான சேவைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நட்டங்களை தவிர்த்து விமான சேவையை செயற்படுத்தத் தேவையாக விடயங்களை எம்முடைய அரசாங்கம் முன்னெடுத்துள்ளது-என்றார்.

இதன்போது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜய சிறி ,சிறிலங்கன் விமான சேவை நட்டம் ஈட்டக் காரணமான விடயங்களில் விமானக்கொள்வனவுகளுக்கான ஒப்பந்தங்களின் ஊடாக ஏற்பட்ட நட்ட விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. பணிப்பாளர் சபை சில விதப்புரைகளை சமர்ப்பித்துள்ளதாக கூறியுள்ளீர்கள். அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயத்தை அறிந்து கொள்ள முடியுமா?. இந்த நிறுவனத்தை தனியார் மயப்படுத்த சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. தனியார் மயப்படுத்தாது பங்குதாரர்களுக்கு இலாபம் பெற்றுக்கொள்ளத்தக்க ஒரு வேலைத்திட்டத்தையேனும் கூற முடியுமா?-என்றார். (அ)

# அபிவிருத்தி முன்னுரிமைகள் குறித்து உலக வங்கிக் குழு பிரதமருடன் பேச்சு

கொழும்பு, ஜன. 23

உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உப தலைவர் மார்டின் ரெய்சர், பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்து பிரதான அபிவிருத்தி முன்னுரிமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

கல்வி, பாலின சமத்துவம் மற்றும் பிராந்திய விடயங்கள், நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் தேசிய சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கான தேவைகள் தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டது.

தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி ஊடாக தரமான கல்வி அணுகலை மேம்படுத்துவது குறித்து பிரதானமாக அவதானம் செலுத்தப்பட்டது. மாணவர்களுக்கு பலதரப்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு தொழில் நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சியினை பிரதான கல்வியுடன் இணைப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

வேலைத்தளங்களில் பாலின சமத்துவம் என்ற சிக்கலுக்குரிய விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பொரு ளாதார செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான தலையீடு மற்றும் ஒத்துழைப்பு கட்டமைப்புகளின் தேவை குறித்தும் இரு தரப்பும் தமது அங்கீகாரத்தை சுட்டிக்காட்டியது.

கல்வி, பாலின சமத்துவம் மற்றும் பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நிலையான தீர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் இலங்கை மற்றும் உலக வங்கியின் பரஸ்பர உறுதிப்பாடு இந்த கலந்துரையாடலின் ஊடாக வலுப்படுத்தப்பட்டது.

நேபாளம், மாலைதீவு மற்றும் இலங்கைக்கான பிராந்திய நாடுகளின் பணிப்பாளர் டேவிட் சிசிலன் உள்ளிட்ட உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகளும், இலங்கை அரசின் சார்பில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளியக வளங்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சமந்த பண்டார வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான இரு தரப்பு சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் தர்ஷன எம். பெரேரா, வெளிவிவகார அமைச்சின் தென்கிழக்காசியா மற்றும் மத்திய ஆசிய பிரிவிற்கான பணிப்பாளர் லஷின்கா தம்முலுகே உள்ளிட்டவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# 200 மில்லியன் தேங்காய்கள் இறக்குமதிக்கு கோரிக்கை!

கொழும்பு, ஜன. 23

அடுத்த சில மாதங்களுக்குள் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு இலங்கை தென்னை கைத்தொழில் சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய தேங்காய் தட்டுப்பாட்டுக்கு உரங்களின் விலையேற்றமே பிரதான காரணம் என்று அதன் தலைவர் ஜெயந்த சமரக்கோன் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு தென்னை முக்கோணத்தில் தென்னைச் செய்கைக்காக அரசாங்கம் 1,437 மில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன குறிப்பிட் டார்.

வடமாகாணத்தில் 40,000 ஹெக்ரேயர் தென்னை மரங்களை நடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1,437 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் நேற்று முன் தினம் பாராளுமன்றில் உரையாற்றும் போது கூறினார்.

நாட்டிலுள்ள 05 ஹெக்ரேயருக்கும் குறைவான தென்னந் தோப்புகளுக்கு இலவச உரம் வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வாய்மொழி மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இருந்து பெறப்பட்ட 55,000 மெற்றிக் தொன் உரத்தில் 27,500 மெற்றிக் தொன் தென்னைச் செய்கைக்காக ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடரும் தேங்காய் பிரச் னையால் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 250 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் சீரற்ற காலநிலையால் 691 பேர் பாதிப்பு, 24 வீடுகள் சேதம்

திருகோணமைலை,ஜன.23

சீரற்ற காலநிலையால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, 24 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் கு. சுகுணதாஸ் தெரிவித்தார்.

மூதூரில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும், குச்சவெளியில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், சேருவிலவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும், கோமரங்கடவலவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும், மொறவெவவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 216 பேரும், தம்பலகாமத்தில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும், கிண்ணியாவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மூதூரில் 15 வீடுகளும், சேருவிலவில் 5 வீடுகளும், மொறவெவவில் 2 வீடுகளும், கிண்ணியா வில் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# "மதுபானசாலை அமைப்பதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்"

கல்முனை, ஜன.23

கல்முனை நீலாவணையில் மக்களை பாதிக்கும் வகையில் மதுபானசாலை அமைப்பதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக, நீலாவணை பொதுமக்கள் ஒன்றுகூடி மதுபானசாலையை ஒழிப்பதற்காக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த மதுபானசாலை அந்த இடத்திலே அமைக்கப்படும் என்றால் அங்கே இருக்கின்ற பாடசாலை மாணவர்கள், அன்றாடக் கூலி வேலை செய்கின்ற வர்க்கத்தினர் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்ற சூழ்நிலை ஏற்படும்.

எனவே, சட்டத்துக்கு உட்பட்ட வகையில் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு அதனை தடுத்து நிறுத்த வேண்டும்- என்றார். (எ)

# குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாண பணிகள் மீண்டும்



கிண்ணியா, ஜன.23

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாண பணிகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 10. 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பாலம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சுமார் 100,000 மக்களின் பயணம் மற்றும் வணிக நடவடிக்கைகளை எளிதாக்கும் என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

பேராதனை, பதுளை செங்கலடி வீதி அபிவிருத்தி திட்டத்திலிருந்து மீதமுள்ள நிதியை இதற்காகப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்த திருத்தப்பட்ட ஒப்பந்தத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன மற்றும் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் பணிப் பாளர் அப்துல் மொஹ்சென் ஆகியோர் கையெழுத்திட்டனர். (எ)

# அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசிய பாடசாலை வெள்ளத்தில்

## கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு



அக்கரைப்பற்று, ஜன.23

அக்கரைப்பற்று சிறீ இராமகிருஷ்ணா தேசிய பாடசாலை வெள்ளத்தால் முற்றுமுழுதாக சூழ்ந்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை பெய்த கனமழையையடுத்து வெள்ளம் பாடசாலையில் புகுந்துள்ளது.

இதனால், பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபம், நூலகம் உள்ளிட்ட பல கட்டடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

பாடசாலைக்கு மாணவர் வரவு வெகுவாக குறைந்திருந்தது வந்த மாணவர்களையும் வெள்ள அபாயம் கருதி பெற்றோர்கள் அழைத்து சென்றனர்.

இந்தப் பாடசாலையின் தாழ்நில பகுதியிலுள்ள அனைத்து வகுப்பறைகளும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. (எ)

# அரசடி பிள்ளையாருக்கு கலச சங்காபிஷேகம்



காரைதீவு, ஜன.23

காரைதீவு முச்சந்தி விபுலானந்த சதுக்கத்தில் உள்ள அரசடி சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கலச சங்காபிஷேகமானது முதல் முறையாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பிரதம குரு சிவ சிறீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில், ஆலய குரு சிவசிறீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள், பூஜைகள் நடைபெற்றன. இதில், பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதேவேளை, பால்குட பவனியானது காலை 09:30 மணியளவில் காரைதீவு சிறீ கண்ணகி அம்மன் ஆலயத்திலி ருந்து ஆரம்பமாகி அரசடி சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தை வந்தடைந்து மூல மூர்த்திக்கு கலச சங்காபிஷேகம் நடை பெற்றது. (எ)

# வெள்ள நீரில் மூழ்கிய கிட்டங்கி வீதி



கல்முனை, ஜன. 23

வெள்ளம் காரணமாக கிட்டங்கி வீதியால் பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அறிவுறுத்தலை பின்பற்றி செல்வதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை, நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பை இணைக்கும் கிட்டங்கி தாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் நேற்று முன்தினம் முதல் போக்குவரத்து கட்டுப்பாட்டுடன் நடைமுறை ப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

# 100இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கின


## அதிகாரிகள்மீது விவசாயிகள் விசனம்

ஒலுவில், ஜன.23

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒலுவில் அஸ்ரப் நகர் பிரதேசத்தில் 100இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கி முழுமையாக சேதமடைந்தன. இன்னும் 20 - 25 நாட்களில் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த வயல்களே இவ்வாறு அழிவடைந்தன.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில் "இது இயற்கை அனர்த்தம் அல்ல. மாறாக குளங்களை பராமரிக்கும் அதிகாரிகள் உரிய முறையில் நீரின் அளவை பேணிப் பராமரித்து இருந்திருந்தால் இவ்வாறான அனர்த்த நிலைமைகளை தவிர்த்திருக்க முடியும். இவ்வாறு பிழையான பரிபாலனம் செய்யும் ஒரு சில அதிகாரிகளால் பல கோடி ரூபாய் நஷ்டங்கள் ஏற்படுகின்றன. விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் அரசாங்கத்துக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. அத்தோடு அரசி தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. இவர்கள் தண்டிக்கப்படுகின்றனரா? இது தொடர்பான அதிகாரிகள்மீது உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும்"- என்றும் தெரிவித்தனர்.

மேலும், இவ் அனர்த்த நிலைமையை பார்வையிட அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ. ரீ. எம். இர்பான், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீவேந்தர டயஸ் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர் சுகிதரன் உள்ளிட்ட அதிகாரிகள் வருகை தந்தனர். (எ)






திருகோணமலை, தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை வுஹாரி முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா ஈச்சநகர் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோட்டலில் பயங்கர தீ விபத்து 66 பேர் பலி! 51 பேர் படுகாயம்

அங்காரா, ஜன.23

**துருக்கியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி இதுவரை 66 பேர் உயிரிழந்தனர். 51 பேர் படுகாயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**



துருக்கி நாட்டின் வட மேற்கு பகுதியில் உள்ள போலு மாகாணத்தில், 12 மாடிகளைக் கொண்ட ஹோட்டல் அமைந்துள்ளது. தற்போது, துருக்கியில் 2 வாரம் பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளதால், இங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது.

இந்த நிலையில், இந்த ஹோட்டலில் நேற்று எதிர்பாராத விதமாக பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதுவரை 66 பேர் உயிரிழந்ததாகவும், 51 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியானது. தீ விபத்து ஏற்பட்டபோது ஹோட்டலில் 238 பேர் தங்கியிருந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டதை அறிந்து ஹோட்டலில் தங்கியிருந்தவர்கள் சிலர் ஜன்னல் வழியாக வெளியே குதித்து தப்பிக்க முயன்றதாகவும், அதில் சிலர் கீழே விழுந்து உயிரிழந்ததாகவும் உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்தனர்.

தற்போது தீ முழுமையாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இதில் தொடர்புடையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் துருக்கி ஜனாதிபதி எர்தோகன் தெரிவித்தார்.(எ)

# ரஷ்யாவின் மீது கூடுதல் தடைகள் விதிக்கப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், ஜன.23

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமில் புடின், உக்ரைனில் நீடிக்கும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைக்கு வர மறுத்துவிட்டால், ரஷ்யா மீது கூடுதல் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் நடந்து வருகிறது.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது. அந்த நாடுகளும் இராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. ரஷ்யாவுக்கு வடகொரியா ஆதரவு வழங்கியுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ட்ரம்ப் பல அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அவர் உக்ரைன் போர் பற்றி கூறும் போது, நாங்கள் ஜெலன்ஸ்கியுடன் பேசி வருகிறோம். புடினிடமும் விரைவில் பேச உள்ளோம்- என்றார்.

அத்தோடு, உக்ரைன் மீதான போரை நிறுத்த தலையிடும்படி சீன ஜனாதிபதி ஜின்பிங்கிடம், தொலைபேசி வழியே பேசும் போது அழுத்தி கூறினேன் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.(எ)

# ஜாவா தீவில் நிலச்சரிவு 17 பேர் உயிரிழந்தனர்!



ஜகார்த்தா, ஜன.23

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவு, திடீர் வெள்ளத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

நிலச்சரிவால் மேற்கு ஜாவா மாகாணத்தின் பெக்கலோங்கன் பகுதியில் உள்ள ஒன்பது கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர் மழையால், மலைக் கிராமங்களில் மண், பாறைகள் மற்றும் மரங்கள் விழுந்தன. பல கிராமங்களில் ஆறுகள் கரைபுரண்டு ஓடுகின்றன. காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலச்சரிவிலிருந்து தப்பித்த 11 பேர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம், இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா மாகாணத்தின் சுகாபூமி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு, திடீர் வெள்ளத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். (எ)

# சீனப் பொருட்களுக்கு கூடுதலாக 10 வீத வரி

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டம்

வாஷிங்டன், ஜன.23

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 10 சதவீத வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

சீனா மீதான கூடுதல் வரிவிதிப்பு தொடர்பான அறிவிப்பை பெப்ரவரி முதலாம் திகதி ட்ரம்ப் வெளியிடுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

அதேபோன்று, மெக்சிக்கோ மற்றும் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். இந்த அறிவிப்பும் வரும் முதலாம் திகதி வெளியா கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 'பிறப்புரிமையால் இனி குடியுரிமை இல்லை'

வாஷிங்டன், ஜன.23

பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமை இரத்து செய்யப்படுவதாக, பதவியேற்ற முதல் நாளில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். அமெரிக்காவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் நிரந்தர அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் மட்டுமே அந்தக் குழந்தைக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். இந்த உத்தரவு 30 நாட்களில் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# “பா. ஜ. கவால் நாட்டுக்கே ஆபத்து”



புதுடில்லி, ஜன.23

இந்தியாவின் தலைநகர் டில்லியில் பா. ஜ. க. மீண்டும் ஆட்சி அமைத்தால் இலவச கல்வியையே ஒழித்துவிடும். பா. ஜ. க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையானது தலைநகருக்கும், நாட்டுக்கும் ஆபத்தானது என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் எச்சரித்துள்ளார்.

70 தொகுதிகளைக் கொண்ட டில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்த நிலையில் பா. ஜ. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையாக வைத்து நான் டில்லி மக்களை எச்சரிக்க விரும்புகிறேன். இது மிகவும் ஆபத்தான கட்சி. தவறுதலாக அவர்களுக்கு வாக்களித்தால், உங்கள் குடும்பங்கள் சிரமத்துக்கு ஆளாகும். நீங்கள் டில்லியில் வசிக்க முடியாத சூழல் உருவாகும் என்று முன்னாள் முதலமைச்சர் கெஜ்ரிவால் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பாராளுமன்றம் மீது தாக்குதல் 1500 பேருக்கு பொதுமன்னிப்பு

## அமெரிக்க ஜனாதிபதி வழங்கினார்

வாஷிங்டன், ஜன.23

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பதவியேற்றவுடன் 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற அமெரிக்க பாராளுமன்றம் மீதான தாக்குதல் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்ட 1,500 இற்கும் மேற்பட்டோருக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்தார். இதனையடுத்து, சிறைகளில் உள்ள ட்ரம்ப் ஆதரவாளர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். (எ)

# அமெரிக்க அரசு முடிவை மீள்பரிசீலனை செய்யும்

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் நம்பிக்கை

வாஷிங்டன்,ஜன.23

உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யும் என்று அந்த அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனான் கேரியாசஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறித்த அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்த நிலையில், “உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த வருத்தம் அளிக்கிறது.



கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக கோடிக்கணக்கான உயிர்களை நாங்கள் காப்பாற்றியுள்ளோம். எங்கள் பணிக்கு அமெரிக்கா உறுதுணையாக இருந்து வருகிறது. வரும் காலத்திலும் அமெரிக்காவின் பங்களிப்பு தொடர வேண்டும். உலக சுகாதார அமைப்பில் இருந்து வெளியேறும் முடிவை அமெரிக்க அரசு மறுபரிசீலனை செய்யும் என உறுதியாக நம்புகிறேன்”- இவ்வாறு டெட்ராஸ் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இந்தியா உட்பட பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுக்கு 100 வீதம் வரி விதிப்பு

வாஷிங்டன், ஜன.23

இந்தியா உட்பட பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா, எகிப்து, எதியோப்பியா, இந்தோனேசியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை கொண்ட அமைப்பு பிரிக்ஸ் ஆகும். உலகளாவிய வர்த்தகப் பரிவர்த்தனைக்கு அமெரிக்க டொலரே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் உலக நிதிசார் அமைப்பில் பல ஆண்டுகளாக அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதைக் கட்டுப்படுத்தும் விதமாக டொலருக்கு மாற்றாக தங்கள் நாட்டு பணத்தின் மூலமே பரிவர்த்தனைகளை மேற்கொள்ள பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகள் பல்வேறு முன்னெடுப்புகளைத் தொடங்கி வருகின்றன. இந்த நிலையிலேயே ட்ரம்ப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது இந்தியா



கொழும்பு, ஜன.23

மாற்றுத்திறனாளிகளுக்கான சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா சம்பியனானது.

இந்தக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்றது. இதில் இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின. லீக் சுற்று முடிவில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழந்து 197 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக யோகேந்திர படோரியா, 40 பந்துகளில் 73 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இதையடுத்து 198 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து 19. 2 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 118 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்திய தரப்பில் ராதிகா பிரசாத் 3. 2 ஓவர்களில் 19 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்களை கைப்பற்றினார். அணித் தலைவர் விக்ராந்த் மற்றும் ரவீந்திரா தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (எ)

## ஆஸி ஓபன் ரென்னிஸ் தொடரில் அரையிறுதியில் ஸ்வியாடெக்

மெல்பேர்ன், ஜன.23

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாடெக் அரையிறுதிக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக் (போலந்து) - அமெரிக்காவின் எம்மா நவரோ உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாடெக் 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் எம்மா நவரோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இகா ஸ்வியாடெக் - அமெரிக்காவின் மேடிசன் கீஸை எதிர்கொள்கிறார். (எ)



## காலிறுதி ஆட்டத்தில் மேடிசன் கீஸ் வெற்றி

மெல்பேர்ன், ஜன.23

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் காலிறுதி ஆட்டத்தில் மேடிசன் கீஸ் வெற்றி பெற்றார்.

இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸ் உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செட்டை 3-6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த மேடிசன் கீஸ், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களில் அபாரமாக விளையாடினார். இதன் மூலம் 2ஆவது மற்றும் 3ஆவது செட்டை 6-3, 6-4 என்ற புள்ளிக்கணக்கில் மேடிசன் கீஸ் கைப்பற்றினார்.

இதன்மூலம் 3 - 6, 6 -3, 6 - 4 என்ற செட் கணக்கில் எலினா ஸ்விடோலினாவை வீழ்த்திய மேடிசன் கீஸ் அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)

## ஜோகோவிச் வெற்றி அல்காரஸ் அதிர்ச்சி

மெல்பேர்ன், ஜன.23

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அல்காரஸை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் ஜோகோவிச். நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் மோதினர்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 6-4 என்ற புள்ளிக்கணக்கில் அல்காரஸ் கைப்பற்றினார். இதையடுத்து தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் ஆட்டத்தின் அடுத்த மூன்று செட்களை 6-4, 6-3, 6-4 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார்.

இதன் மூலம் அல்காரஸை வீழ்த்திய ஜோகோவிச் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறி அசத்தினார். நாளை 24ஆம் திகதி நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ் உடன் மோதவுள்ளார். (எ)



## ஒருநாள் தரவரிசையில் மந்தனா முன்னேற்றம்

டுபாய், ஜன.23

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) மகளிருக்கான ஒருநாள் தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில், இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா முன்னேற்றம் கண்டுள்ளார்.



இதன்படி துடுப்பாட்ட தரவரிசையில் இந்தியாவின் மந்தனா (738 புள்ளி) ஒரு இடம் முன்னேறி 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். இந்தப்பட்டியலில் தென்னாபிரிக்காவின் லாரா வோல்வார்ட் (773 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இலங்கையின் சமரி அத்தபத்து (733 புள்ளி) 3ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் நாட் ஸ்கிவர் பிரண்ட் (725 புள்ளி) 4ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஒருநாள் பந்துவீச்சு தரவரிசை பட்டியலில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் (770 புள்ளி) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (724 புள்ளி) 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் மேஹன் ஸ்கட் (696 புள்ளி) 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் தீப்தி சர்மா (680 புள்ளி) ஓர் இடம் உயர்ந்து 4ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

ஒருநாள் சகல துறை தரவரிசை பட்டியலில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (469 புள்ளி) ஓர் இடம் உயர்ந்து முதல் இடத்துக்கு வந்துள்ளார். தென்னாபிரிக்காவின் மரிசேன் கேப் (444 புள்ளி) 2ஆவது இடத்திலும், மேற்கு இந்திய தீவுகளின் ஹேலி மேத்யூஸ் (426 புள்ளி) 3ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)

## சிறப்பாக ஆடவில்லை அணியில் இடமில்லை

### சூர்யகுமார் யாதவ் பதில்

கொல்கத்தா, ஜன.23

நான் சிறப்பாக ஆடவில்லை, அதனால் அணியில் இடம் கிடைக்கவில்லை என்று சூர்யகுமார் யாதவ் தெரிவித்தார்.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்திய ரி - 20 அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவ் செய்தியாளர்களை சந்தித்தபோது அவரிடம், சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான அணியில் இடம்கிடைக்காதது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த சூர்யகுமார் யாதவ், "அணியில் இடம் கிடைக்காதது ஏன்? என்னை காயப்படுத்த வேண்டும். ஒரு நாள் போட்டியில் நான் நன்றாக ஆடியிருந்தால் சம்பியன்ஸ் கிண்ண அணியில் இடம் கிடைத்திருக்கும். நான் சிறப்பாக ஆடவில்லை என்றால், அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதே சமயம் சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்கான இந்திய அணியை பார்த்தால் நன்றாக இருக்கிறது.

அணியில் இடம் பெற்றுள்ள அனைவரும் இந்திய அணிக்காகவும், முதல்தர கிரிக்கெட்டிலும் சிறப்பாக விளையாடியுள்ளனர். அவர்களை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். - என்றார். (எ)

## போராடி வென்றார் அரினா சபலெங்கா

மெல்பேர்ன், ஜன.23

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் போராடி வென்ற அரினா சபலெங்கா அரையிறுதிக்கு முன்னேறினார்.

காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா (பெலாரஸ்) - ரஷ்யாவின் அனஸ்தேசியா பாவ்லியுசென்கோவா உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 6-2 என்ற புள்ளிக்கணக்கில் சபலெங்காவும், 2ஆவது செட்டை 6-2 என்ற புள்ளிக்கணக்கில் அனஸ்தேசியாவும் கைப்பற்றினர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செட்டில் அனல் பறந்தது.பரபரப்பாக நடைபெற்ற இந்த செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகளை எடுத்தனர். இறுதியில் 6-3 என்ற புள்ளிக்கணக்கில் அனஸ் தேசியாவை



வீழ்த்தி சபலெங்கா வெற்றி பெற்றார். இறுதியில் 6-2, 2-6, 6-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று சபலெங்கா அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர்...

என்பதால் அவரை இலங்கைக்கு அழைத்து வருவது கடினமாகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இந்த விவகாரத்தின் பாரதூரத் தன்மையை சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தி, அர்ஜூன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார். (அ)

## சட்ட...

உப சம்பதா அரச நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த மதத்துக்குள் காணப்படும் முக்கிய நிகழ்வான உபசம்பதா நிகழ்வின் வரலாற்று முக்கியத்துவத்தை இதன்போது நினைவு கூர்ந்த ஜனாதிபதி, உபசம்பதா முறை தடைப்படுவது முழு பௌத்த அமைப்பினதும் சிதைவாக அமையும் என்றும், இந்த வரலாற்று பாரம்பரியத்தை பாதுகாத்து கௌரவத்துடன் முன்னோக்கிக் கொண்டுச் செல்லவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இலங்கை ராமண்ய பீடத்தினால் நடத்தப்படும் உபசம்பதா தேசிய நிகழ்வு 2025 ஜூன் 30 ஆம் திகதி முதல் ஜூலை 05 வரையில் விஜிதபுர, பழுகஸ்வெவ, புண்யவர்தனாராம விகாரையை மையப்படுத்தி உதகுக்கேப சீமாமாலக்கயவில் நடத்தப்படவுள்ளது. 250 இற்கும் அதிகமான இளம் பிக்குகளுக்கான உபசம்பதா நிகழ்வு அரசாங்க அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இலங்கை ராமண்ய மகா பீடத்தில் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உப சம்பதா நிகழ்வு ஒரு கௌரவ நிகழ்வாக அரசாங்கத்தினால் கருதப்படும் நிலையில் அதற்கு அவசியமான வசதிகளை தயக்கமின்றி செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

பௌத்த மத பாரம்பரியத்தை பாதுகாப்பதன் ஊடாக சமூக மலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும், இவ்வாறான மத நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் சமூகத்தின் மலர்ச்சியை மேலும் வலுப்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார இதன்போது தெரிவித்தார். (அ)

## மாகாண...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டங்கள் இயற்றப்பட்டவுடன் மாகாண சபைகள் திறமையற்ற வெள்ளை யானைகள் என்ற கூற்றை நிவர்த்தி செய்யும். இந்த தனியார் உறுப்பினரின் வரைவு சட்ட முன்மொழிவில் மாகாண சபை அமைப்பின் செயல்திறனை அதிகரிப்பதில் உள்ள சில தடைகளை சமாளிக்கக்கூடிய ஒரு திட்ட ம் உள்ளது. இந்தச் சட்டங்கள் சுமை நிறைந்த நிதிச் சட்டங்களையும் நிறுவன கட்டமைப்பையும் பகுத்தறிவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

அதன் வரைவுகள் பின்வருமாறு-

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் எண் அதிகாரப் பகிர்வு (கோட்டச் செயலாளர்கள்) சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு பிரேரணை.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் எண் மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு பிரேரணை.

1992 ஆம் ஆண்டின் 58 ஆம் எண் அதிகாரப் பகிர்வு (கோட்டச் செயலாளர்கள்) சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு பிரேரணை.

இந்த மூன்று பிரேரணைகளையும் எந்தவொரு அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது வாக்கெடுப்போ தேவையில்லாமல், மிகக் குறுகிய காலத்திற்குள் பாராளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்...

சிவஞானம் கடிதம் ஒன்று சமர்ப்பித்தார்.

அக் கடிதத்தின் விவ ரம் வருமாறு-

யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு அருகாமையில் திறந்தவெளி அரங்கு அமைந்திருந்த யாழ்ப்பாண மாநகர சபைக்கு உரித்தான காணியில் அதற்குப் பதிலாக இந்திய மத்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப் பட்ட 'யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்' 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

இந்த நிலையத்தின் நிர்வாகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாநகர சபையின் நிதி வசதியீனத்தைக் காரணம் காட்டி அவ்வாறு செய்யப்படாமல் சில முக்கிய அரசியல் காரணங்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தக் கட்டடம் அதன் முழுமையான அம்சங்கள் ஆராயப்படாமல் நிர்மாணிக்கப்பட்டமையே இந்த நிலை உருவாக காரணமாகியது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறிருக்கையில் கடந்த 18.01.2025 ஆம் திகதி சனிக்கிழமை இதன் பெயர் 'திருவள்ளுவர் கலாசார மையம்' என மாற்றப்பட்டதாக இலங்கையின் பிரதி கலாசார அமைச்சரும் இலங்கைக்கான இந்திய தூதுவரும் வேறு சிலரும் கலந்துகொண்ட சந்திப்பில் பெயர் மாற்றத்துடனான பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின் அரசியல் தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை என்பது எமக்கு மிகவும் ஆச்சரியத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். இந்த நடவடிக்கை பற்றிய ஆழமான அதிருப்தி உள்ளது என்பதை மட்டும் குறிப்பிட்டு, இது ஓர் இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையேயான உணர்வுபூர்வமான விடயம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதனால் விபரமாக அதிருப்தியை பதிவு செய்வதை தவிர்க்கிறோம்.

தெய்வப் புலவர் ஐயன் திருவள்ளுவருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ஔவைக்கும், மகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் நாமாக இங்கு சிலை எடுத்தவர்கள் நாங்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இப்படியிருக்கையில் இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான 'யாழ்ப்பாணம்' என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும். இது இந்தியாவுக்கும் எமக்குமிடையேயான நல்லுறவில் ஆழமான குழியாக அமைந்து விடக்கூடாது என நாம் திடமாக நம்புகிறோம். 'யாழ்ப்பாணம்' என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இலங்கை அரசின் அரசமைப் பின் 16 ஆவது இலக்க திருத்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங் களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகும். சிங்களம் அடுத்த நிர்வாக மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்பது அரசியல மைப்பின் ஏற்படாக இருக்கையில் சிங்கள மொழியில் முதலாவதாகவும் ஆங்கில மொழியில் இரண்டாவதாகவும் தமிழ் மொழியில் மூன்றாவதாகவும் பெயர்ப் பலகை எழுதப்பட்டிருப்பது இந்த ஏற்பாடுகளை மீறும் செயலாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகி றோம் - என்றுள்ளது. (அ)

## வட்டுவாகல்...

வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக, வட்டுவாகல் பாலம் தொடர்பான தேவையை தொடர்ச்சியாக வலியுறுத்திய ரவிகரன் எம்.பி., 2023ஆம் ஆண்டு பல சந்திப்புகளில் இதனை முன்வைத்துச் செயற்பட்டார்.

வெள்ள அனர்த்தக் குழுக் கூட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் பாலத் தேவையை வலியுறுத்தியதுடன், சம்பந்தப்பட்ட பகுதியை நேரில் பார்வையிட அழைத்துச் சென்றார்.

நேற்றைய பாராளுமன்றத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்தப் பாலத்துக்கான நிதி ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரி வித்திருந்தமை குறித்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் வட்டு வாகல் பாலம் அமைப்பது, அந்தப்பகுதி மக்களின் போக்குவரத்து இடர்பாடு களை தீர்ப்பதுடன், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு துணை செய்யும் எனவும் ரவிகரன் எம்.பி. குறிப்பிட்டார்.

## உணவுப்...

உணவுக் கட்ட மைப்பொன்றை உறுதி செய்யும் அரசாங்கத்தின் கொள் கையை நிறைவேற்றுவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் நோக்கமாகும்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதில் தரவுகளும் தகவல்களும் மிக முக்கியமானவை என்றும், அவையின்றி முடிவுகளை எடுக்கும் அபாயத்தை எதிர் கொள்ள இந்த அரசாங்கம் இனியும் தயாரில்லை என்றும் எனவே, துல்லியமான தரவுக் கட்டமைப்பை உரு வாக்குவதற்கு அதிக முன்னுரிமை அளிப்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட் டது.

மேலும், நாட்டு மக்களின் உணவு நுகர்வு தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும் எனவும் ஆரோக்கியமான மக்களை உருவாக்கவும், உணவு விரயத்தைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுப் பொருள் தகவல் கட்டமைப்பைப் பராமரித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல் களின் அடிப்படையில் புதிய திட்டத்தை உருவாக்குதல் மற்றும் அறிவியல் சான்றுகளின் அடிப் படையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கவும் விநியோகத்திற்கு திட்டமொன்றைத் தயாரித்தல் ஆகிய பல விடயங்கள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப் பட்டது. (அ)

## அரிசி...

செயற்படாவிட்டால், நெல் ஆலையில் உள்ள தமது கடைக்கு அரிசி கொண்டு செல்லும் வரை இராணுவ கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் எனவும் ஜனா திபதி வலியுறுத்தினார்.

அத்துடன் அரிசி தேசிய சொத்து எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நியாயமற்ற விதிமுறைகளையும் ஏற்படுத்தவில்லை எனவும் ஆலை உரிமையாளர் எவரேனும் இதற்கு இணங்காவிட்டால், ஆலையை இராணுவத்தினர் கையகப்படுத்தி அரிசி உற்பத்தி செய்து சந்தைக்கு விடப்படும் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

தற்போதைய கட்டுப்பாட்டு விலையை விட ஒரு சதம் அதிகமாக அரிசி விற்பனை செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார மேலும் தெரிவித்தார். (அ)

## தமிழ்...

கொழும்பில் தூதுவர் காரியாலயத்தில் இடம்பெற்றது .

குறித்த சந்திப்பில் தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம் புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துக் கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (அ-05)

## இனப்பிரச்னை...

அமைச்சரும் எனது நல்ல நண்ப ருமான நீதி அமைச் சர் இங்கு வந்திருப் பது குறித்து நான் மகிழ்ச்சிய டைகிறேன். கடந்த சில நாட்களுக்கு முன் அவரது கருத்துக்கள் தொடர்பாக தெரிவிக்க வேண்டும். ஜே.வி.பியுடன் இணைந்த தேசிய மக்கள் சக்தியின், தமிழ்த் தேசியப் பிரச்னை தொடர்பான அவர்க ளின் கடந்த கால நிலைப்பாடுகள் காரணமாக, எனக்கு அவர்களுடன் அதிக உடன்பாடு இல்லை. இனப் பிரச்னை தொடர்பான தமது நிலைப் பாட்டை ஜே.வி.பி இன்னும் தெளி வாக்கவில்லை. மேலும் அரசாங்கத்தில் உள்ள சில உறுப்பினர்கள் பல விடயங் களில் மிகவும் முற்போக்கான கருத்துக் களைக் கொண்டுள்ளனர் என்பதையும் நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்னைகளில் ஒன்று இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டமா கும் . நான் மட்டுமல்ல ஜே.வி.பியே உடன்படாத ஒரு சட்டமுமாகும். இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஜே.வி.பியே கண்டித்திருக்கிறது. ஏனென்றால் அவர்களும் இச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டார்கள். தேர்தலின் போதும் அதற்கு முன்பும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று கூறப்பட்டது. 2015 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று உறுதியளித்திருந்தது. ஆனால் தேர்தல்கள் முடிந்தபின், அப்போதைய அரசாங்கம் முதல் வாரத்திலேயே அந்த உறுதிப்பாட்டில் இருந்து மிக விரைவாக பின்வாங்கிவிட்டது. நினைவேந்தலின் போது கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். சில கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னரே காவல்துறையினர் நீதிமன்றங்களுக்குச் சென்று தம்மால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பி அறிக்கைகளில் இருந்த பயங்கரவாத குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றிருந்தனர்.

நீங்கள் இந்தச் சட்டத்தை கொடூரமானது என்று சொல்கிறீர்கள், காவல்துறையோ அதை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அதை எப்போதும் தவறாகப் பயன்படுத்துவார்கள், இது இந்த பயங்கரமான சட்டத்தின் வரலாறாகும். உங்கள் அரசாங்கம் வேறுவிதமாக இருக்க விரும்பினால், நீங்கள் நெறிமுறையாக இருக்க விரும்புகிறீர்கள் என்றால் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற உங்களின் முந்தைய கொள்கையிலிருந்து நீங்கள் ஒருபோதும் பின்வாங்க முடியாது. தேவைக்கேற்றவாறு நீங்கள் கொள்கையை மாற்றியமைக்க முடியாது. கிளிநொச்சி கோணாவில் பாடசாலைக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் சென்று ஆசிரியர்களை விசாரணை செய்ய முயன்றுள்ளனர். இல்ல விளையாட்டுப் போட்டியின் போது அலங்காரம் செய்தமைக்கு கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் விசாரிக்கப்படுகிறார்கள்.

வடகிழக்கிற்கு வேறு வடிவத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது, அது நீங்கள் கூறும் நெறிமுறைக்கு புறம்பானதாக அமையும். சிலர் கூச்சலிடுவதால், உங்க நிலைப்பாட்டை மாற்ற முடியாது. நீங்கள் புதிய கலாசாரத்தை உருவாக்க போகிறீர்கள் என்றால் நீங்கள் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் செயற்பட வேண்டும். நீங்கள் அதே முந்தைய அரசாங்கங்களின் பாதையில்தான் செல் வீர்களாயின் அதே போன்றே பாதிக்கப்படுவீர்கள் -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அனர்த்த உயிரிழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு!

## 25,000 ரூபா ஒரு மில்லியனாக உயர்வு

கொழும்பு, ஜன. 23

**அனர்த்தங்களினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகையை 250,000 ரூபாவிலிருந்து ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.**

பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலை மையில் கொழும்பில் இடம் பெற்ற கலந்துரையாடலில் வைத்தே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது சீரற்ற காலநிலை யினால் பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு உதவிகளை வழங்கும் வகை யில் வானிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளன.

அத்துடன், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலா ளர்கள், அரச அதிகாரிகள், முப் படையினர், காவல்துறை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிற நிவாரண அமைப்புகள் அனைத் தும் அனர்த்த நிவாரணப் பணிக ளில் ஈடுபட்டுள்ளன.

ஜனாதிபதியின் உத்தரவுக்க மைய அனர்த்த நிவாரண சேவைக ளுக்காக 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்குத் தினசரி உணவுப் பங்கீட்டுக் கொடுப்பனவுக்காக ஒருவருக்கு 1,800 ரூபாய் தொடக்கம் குடும்ப அளவைப் பொறுத்து நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ)

# மின்கட்டணக் குறைப்பு பிரதிபலனை அடுத்த மாத பட்டியலுடன் பெறலாம்!

கொழும்பு, ஜன. 23

மின்கட்டணக் குறைப்பின் பிரதிபலனை அடுத்த மாத மின்கட்டணப் பட்டியலின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என வலுசக்தி அமைச்சர் பொறியி யலாளர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரம ரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன்போது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பால் எழுப்பப்பட்ட வாய்மூல வினாவுக்கான கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை கூறினார்.

இதற்கு பதிலளித்த வலுசக்தி அமைச்சர் பொறி யியலாளர் குமார ஜெயக்கொடி,

கடந்த 17 ஆம் திகதியிலிருந்து மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மின் கட்டணப் பட்டியலில் இதன் பிரதிபலன் கிடைக் கப்பெறும். இதன்போது ஒவ்வொரு அலகுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக 21 வீத குறைப்பு ஏற்பட்டிருப்பினும் தொழிற்சாலைகளை பொறுத்தவரை 31 சதவீத விலை குறைப்பு இடம்பெற் றுள்ளது. 17 ஆம் திகதிக்கு பின்னர் இந்த விடயம் அமுலுக்கு வந்துள்ளது - என்றார். அ)

# நெல் உற்பத்தியின் பற்றாக்குறையே அரிசித் தட்டுப்பாட்டுக்குக் காரணம்!

கொழும்பு, ஜன. 23

கடந்த ஆண்டு நெல் உற்பத்தி யில் ஒரு மில்லியன் மெட்ரிக் டன் பற்றாக்குறை ஏற்பட்டமையே அரிசி பற்றாக்குறைக்கு முக்கிய கார ணம் என அரச கணக்குகள் பற்றிய குழுவில் வெளிப்படுத்தப்பட் டுள்ள து.

விவசாய அமைச்சின் அதிகாரி கள் குறித்த குழுவின் முன் அழைக் கப்பட்டபோது இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சாதாரணமாகப் பெரும்போகத் தில் 4.39 மில்லியன் மெற்றிக் தொன் னும், சிறுபோக பருவத்தில் ஒரு மில்லியன் மெற்றிக் தொன்னுமாக நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

எனினும், கடந்த 2023 - 2024 ஆம் ஆண்டில் வருடம் முழுவதும் 4.3 மில்லியன் மெற்றிக் தொன் நெல் மாத்திரமே உற்பத்தி செய்யப் பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக் காட்டியிருந் தனர்.

இவ்வாறு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டமைக்கு பருவநிலை மாற் றம் பிரதான காரணமாக அடைய ளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன், சில தரப்பினர் நெல்லை கொள்வனவு செய்து சேமித்து வைத்திருந்ததாகவும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் முன்னி லையில் தெரியவந்துள்ளது. (அ)

# வடபகுதி மீனவர் பிரச்னைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குக!

## கடற்றொழிலமைச்சரிடம் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 23

கடற்றொழிலாளர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில் அமைச்சரிடம், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகரன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பா ணம், கிளிநொச்சி ஆகிய வடபகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடற்றொழில் அமைச்சருக்கு எடுத்துரைக்கப்பட்டது டன், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப் பட்டுள்ளது. (அ)

# அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தால் நன்மை

## அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 23

அம்பாந்தோட்டையில் எண் ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டுக்கு பாரிய அந்திய செலாவணி வருவாய் கிடைக்கப் பெறும் என வெளிநாட்டலுவல் கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சீன விஜயம் குறித்து ஊடகங்களுக்கு விளக்கம ளிக்கும் வகையில் நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாந்தோட்டையில் எண் ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் வேலைத்திட்டம் பல வருடங்களுக்கு முன்னராகவே சீனா வினால் முன்வைக்கப்பட்டுள்ளது. பல கட்ட கலந்துரையாடல்கள் இது தொடர்பில் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

ஆனால் அவை செயற்படுத் தப்படவில்லை. கடந்த 2023 ஆம் ஆண்டில் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. 6 நிறுவனங்கள் இந்த விடயத்திற்காக முன்வந்துள் ளனர். குறித்த ஆறு நிறுவனங்களில் இறுதியாக சைனோ பெக் நிறுவ னமே தெரிவு செய்யப்பட்டுள் ளது.

அதற்கமைய 3.7 பில்லியன் டொலர் செலவிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. அந்த வகையில் இவ்வாறு தயாரிக்கப்படும் எரி பொருள் ஏற்றுமதி செய்யப்பட வுள்ளது. இதுவே சைனோ பெக் நிறுவனத்தின் நோக்கமாகவுள்ளது. அவற்றின் ஒரு பகுதியை நாட்டின் சந்தைக்கு விநியோகிக்கவும் கலந் துரையாடல்கள் இடம்பெறுகின் றன.

எந்த நாடுகளுக்கு இந்த விநியோகத்தை மேற்கொள்ளப் போகின்றார்கள் என்ற தீர்மா னத்தை சைனோ பெக் நிறுவனமே மேற்கொள்ளும். அதற்கான அடிப் படை வசதிகள் மற்றும் நிலத்தை வழங்கும் விடயத்தையே நாம் மேற் கொள்ளவுள்ளோம் - என்றார். (அ)

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு!

கொழும்பு, ஜன. 23

சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, பின்வரும் அத்தியாவசியப் பொருட் களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதுடன், நுகர்வோர் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் இந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரூ.1095 ஆக இருந்த நிலக்கடலை ரூ.995 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

340 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பிரவுண் சீனி 300 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 210 ரூபாவாக இருந்த இறக்குமதி செய் யப்பட்ட உருளைக்கிழங்கு 180 ரூபாவாக குறைக்கப் பட்டுள்ளது.

795 ரூபாவாக இருந்த சிவப்பு கௌபி கிலோ ஒன்று 765 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உலர் நெத்தலி 940 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 830 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங் காயம் 240 ரூபாவிலிருந்து 230 ரூபாவாக குறைக்கப்பட் டுள்ளது.

மேலும் ஒரு கிலோ துவரம் பருப்பு 290 ரூபாவிலி ருந்து 288 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ வெள்ளை சீனி 242 ரூபாவிலிருந்து 240 ரூபா வாக குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு 5 எஸ் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது

கிளிநொச்சி,ஜன.23

கிளிநொச்சி மாவட்ட செய லகத்துக்கு 5 எஸ் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் செயல கத்தால் நடத்தப்பட்ட 5 எஸ் தரச்ச ான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே 5 எஸ் தரச்சான் றிதழை கிளிநொச்சி மாவட்ட செயலகம் பெற்றுக்கொண்டது.



தேசிய உற்பத்தித்திறன் செய லகம் நடத்தும் உற்பத்தி திறன் கருவிகளில் ஒன்றான 5 எஸ் சான்றி தழ் திட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகம் கடந்த வருடம் விண்ணப்பித்திருந்தது. இதனடிப்படையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை மேற் பார்வை மதிப்பீட்டு குழுவினர் கண் காணித்தனர். இதனடிப்படையில் 5 எஸ் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது.(எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2025 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org